## 2026.07.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத வீதிகளை மேம்படுத்தல்

எமது நாட்டின் A மற்றும் B தரத்திலான வீதிகள், அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் அவற்றின் பாலங்கள் உள்ளிட்ட வீதிகளை நிர்மாணித்தல், புனரமைத்தல், மேம்படுத்தல், பராமரித்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத வேறு அதிகாரிகளின் கீழ் காணப்படுகின்றதும் மற்றும் துரிதமாக புனரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டிய வீதிகளை, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைத்து புனரமைப்புக்களுக்கான படிமுறைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அதற்கமைய, மாகாண சபைகள் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குச் சொந்தமான அவ்வாறான 60 வீதிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. குறித்த வீதிகளை புனரமைப்புச் செய்வதற்கு தேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றிய விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக கீழ்வரும் பிரதிநிதிகளுடன் கூடிய அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
- போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
- பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- நிதி ஆணைக்குழு
- மாகாண பிரதம செயலாளர்கள்
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை
- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளர்

### 02. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மீன்பிடித் தொழிலாளர்கள் தொடர்பான சமவாயத்தை (C188) ஏற்று அங்கீகரித்தல்

2007 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 96 ஆவது சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மீன்பிடித் தொழிலாளர்கள் தொடர்பான சமவாயம் (C188) நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்மூலம், மீன்பிடிச் சமூகத்தின் சிறந்த தொழில் நிலைமைகள், சுகாதார வசதிகள், மருத்துவ சிகிச்சைகளுக்கான அணுகல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தரநியமங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏறத்தாழ 315,000 இற்கும் அதிகமான மீன்பிடித் தொழிலாளர்களுடன் கூடிய இலங்கை மீன்பிடித் தொழிற்றுறை, அதன் இயல்பு மற்றும் பாரம்பரிய செயற்பாடுகளால் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தொழில் நிபந்தனைகள் தொடர்பான பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. அதனால், இச்சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு மீன்பிடித் தொழிற்றுறையில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தரநியமங்களை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மீன்பிடித் தொழிலாளர்கள் தொடர்பான சமவாயத்தை (C188) ஏற்று அங்கீகரிப்பதற்கும்,



163, කිරුලපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

குறித்த தரநியமங்களை நிறுவுவதற்கான ஒழுங்குவிதிகளை படிப்படியாக அமுல்படுத்துவதற்கும் கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. கண்டி எசல பெரஹராவுடன் தொடர்புடைய தொன்மைகள், கலாச்சாரப் பண்பாடுகள் மற்றும் மரபுவழி புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்**

உலக புலமைச் சொத்து அமைப்பின் (World Intellectual Property Organization – WIPO) அபிவிருத்தி மற்றும் புலமைச் சொத்துக்கள் தொடர்பான குழு 'புலமைச் சொத்துக்கள் மூலம் உற்சவங்களுக்கான சுற்றுலாத்துறை மேம்படுத்தல்' எனும் பெயரிலான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுப் பாரம்பரியங்கள் மற்றும் கலாச்சாரப் பண்பாட்டு மரபுரிமைகளுக்கு மதிப்பளித்து, உற்சவங்களுக்கான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக புலமைச் சொத்துக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக அனுகூலங்களைப் பெறுகின்ற நாடுகளில் உற்சவங்களை ஏற்பாடு செய்பவர்களின் இயலளவை விருத்தி செய்வதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். பல நூற்றாண்டுகளாக தொடர்ந்துவந்த பாரம்பரியக் கலை வடிவங்களாலும் அறிவாலும் மெருகூட்டப்பட்ட கண்டி எசல பெரஹரா மற்றும் அதுசார்ந்த தொன்மைகள், கலாச்சாரப் பண்பாடுகள் மற்றும் மரபுவழி புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் கருத்திட்ட முன்மொழிவொன்று, 'புலமைச் சொத்துக்கள் மூலம் உற்சவங்களுக்கான சுற்றுலாத்துறை மேம்படுத்தல்' எனும் கருத்திட்டத்திற்கு முன்வைக்கக்கூடிய சாத்தியவளங்கள் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 'வெளியீட்டு உரிமையைப் பாதுகாத்தல்' மற்றும் 'வர்த்தக சின்னங்கள் மற்றும் நாமம்' போன்ற துறைகள் மீது விசேட கவனத்தைச் செலுத்தி, தொன்மைகள், கலாச்சாரப் பண்பாடுகள் மற்றும் மரபுவழி புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் கருத்திட்ட முன்மொழிவைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்காக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்களின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் குறித்த அனைத்துப் பங்காளரங்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. அவுஸ்திரேலிய றோயல் மெல்பர்ன் தொழிநுட்ப நிறுவகம் (RMIT) மற்றும் இலங்கையின் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

நீர் மற்றும் கழிவு நீர் தொடர்பான துறைகளை நவீனமயப்படுத்தல், ஆய்வு இயலளவுகளை அதிகரித்தல் மற்றும் சர்வதேசக் கற்கைகள் ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்தல் பற்றிய அரச கொள்கைக்கமைய, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொறியியல், சூழலியல் விஞ்ஞானம், முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப புத்தாக்கத் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த அவுஸ்திரேலிய றோயல் மெல்பர்ன் தொழிநுட்ப நிறுவகத்துடன் பங்களிப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்காக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. முன்மொழியப்பட்டுள்ள பங்களிப்புக்கள் மூலம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பணிக்குழாமினரின் தொழிநுட்ப அறிவு, ஆய்வு இயலளவுகள் மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்தி வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும், இலங்கையின் நீண்டகால நீர் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இலக்குகளுக்குப் பங்களிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய செயலாற்றுவதற்கு இருதரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாடுகளின் அடிப்படையில், அவுஸ்திரேலிய றோயல் மெல்பர்ன் தொழிநுட்ப நிறுவகம் மற்றும் இலங்கையின் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்

வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கை போக்குவரத்துச் சபையின் நகரங்களுக்கிடையிலான சேவைகள்/தூரப் பயணச் சேவைகளுக்காக 600 பேருந்துகளைக் கொள்வனவு செய்தல்**

2026 ஆம் ஆண்டில் அரச முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 49-54 ஆசனங்களைக் கொண்ட Standard மாதிரியின் புதிய 600 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக 14,400 மில்லியன் ரூபாய்கள் நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிதியொதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், வீதிப் பாதுகாப்புத் திட்டம் - 2025 – 2026 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்துக்கு உட்படுத்தப்படும் பேருந்துகள் பாதுகாப்பான வாகனங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, நகரங்களுக்கிடையிலான சேவைகள் மற்றும் தூரப் பயணச் சேவைகளுக்குப் பொருத்தமான பேருந்து வகைகள் மற்றும் அவற்றின் குறைந்தபட்ச விபரக்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்விபரக் குறிப்புக்களுக்கமைய நகரங்களுக்கிடையிலான சேவைகள்/தூரப் பயணச் சேவைகளுக்காக Deluxe (வளிச்சீராக்கி பொருத்தப்பட்ட) பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். அதற்கமைய, தற்போது நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ள Standard மாதிரியின் புதிய 600 பேருந்துகளுக்குப் பதிலாக Deluxe (வளிச்சீராக்கி பொருத்தப்பட்ட) பேருந்துகள் மிகவும் சொகுசான வசதிகளைக் கொண்ட பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு இரண்டு துறைமுக இழு படகுகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைகளை விரிவாக ஆராய்ந்த பின்னர், அதிகாரசபையின் இழு படகுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் 70 தொன்கள் Bollard Pull (BP) Twin Azimuth stern Drive வகையைச் சேர்ந்த துறைமுக இழு படகுகள் இரண்டை குறித்த காலப்பகுதிக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக 2025.01.06 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் தகைமையுடைய விநியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு சர்வதேச போட்டி விலைமுறி முறைமையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்கு 03 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழு வழங்கியுள்ள விதப்புரையை அடிப்படையாகக் கொண்டு, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Srilanka Shipping Company Limited இற்கு 05 ஆண்டு காலப்பகுதிக்கு 17.16 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (ஏற்புடைய வரிகள் மற்றும் தீர்வை வரியில்லாமல்) குறித்த துறைமுக இழு படகுகளை விநியோகிப்பதற்காக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. ஆரம்ப சிகிச்சை சேவையில் பொறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட உயர் குருதியழுத்தம் மற்றும் நீரிழிவு முகாமைத்துவத்திற்கான கருத்திட்டம்**

களுத்துறை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, காலி, கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட ஆரம்ப சிகிச்சை சேவையில் பொறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட உயர் குருதியழுத்தம் மற்றும் நீரிழிவு முகாமைத்துவம் தொடர்பான கருத்திட்டத்தை

அமுல்படுத்துவதற்காக Resolve to Save Lives, Inc. நிறுவகத்திற்கு 242,125 அமெரிக்க டொலர்களுக்கு வழங்குவதற்காக 2026.01.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் Resolve to Save Lives, Inc. நிறுவகத்துடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த ஒப்பந்தக் காலம் 2026.09.30 ஆம் திகதியுடன் முடிவடைவுள்ளது. 2026.05.31 ஆம் திகதிக்கு இந்நிதியில் 50,320 அமெரிக்க டொலர்கள் மீதமாயுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, எஞ்சியுள்ள நிதியைப் பயன்படுத்தி கருத்திட்டச் செயற்பாடுகளை பயனுள்ள வகையில் மேலும் அமுல்படுத்தக் கூடிய வகையில் கருத்திட்டக் காலப்பகுதியை 2027.12.31 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இலங்கை பட்டயக் கணனி நிறுவகத்தை தாபித்தல்**

இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையில் தொழில் வல்லுநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி வகிக்கின்ற ஒரேயொரு நிறுவகமாக 'இலங்கை கணனிச் சங்கம்' 1976 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கணனித் துறையிலுள்ள தொழில்வாண்மையாளர்களின் விருப்பங்களை எடுத்தியம்புகின்ற பிரதான தொழில்வாண்மை அமைப்பாக, சான்றுப்படுத்தப்பட்ட அங்கீகார நிலைமை மற்றும் முறைசார்ந்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள ஏனைய தொழில்வாண்மை நிறுவகங்களுடன் சமமான நிலைமையில் கருத்தில் கொள்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் இலங்கை பட்டயக் கணனிச் சங்கத்தை தாபிக்க வேண்டியதன் முக்கியத்துவம் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவைக் கருத்தில் கொண்டு, இலங்கை பட்டயக் கணணி நிறுவகத்தைத் தாபிப்பதற்கு அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கும், அதன் உத்தேச நோக்கங்களுக்கமைய சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**09. 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை நீக்கி வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையைப் பலப்படுத்துவதற்கான புதிய சட்டத்தை உருவாக்கல்**

வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்தல், இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகையைப் பாதுகாத்தல் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு தொழில் வாய்ப்புத் துறையின் சமகாலப் போக்குகளுக்குப் பொருத்தமான வகையில் பதிலளிப்பதற்கும் மற்றும் தேசிய முன்னுரிமைகள் மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் தற்போதுள்ள நியதிச்சட்ட பணிமுறைச் சட்டகத்தை புதுப்பிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. இத்தேவைகளுக்கு 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை நீக்கி புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான சட்ட ரீதியானதும் நிறுவன ரீதியானதுமான பணிமுறைச் சட்டகத்தை புதுப்பிப்பதற்கும் பலப்படுத்துவதற்குமான கருத்தாக்கப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த கருத்தாக்கப் பத்திரத்தின் அடிப்படையில், 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

காணித் துண்டுகளின் உரித்தைப் பதிவு செய்தல், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட காணித் துண்டுகளுக்குரிய பரிவர்த்தனைகளை முறைமைப்படுத்தல் மற்றும் அதுசார்ந்த இடைநேர் விளைவுகளுக்கான கருமங்களுக்கு ஏற்பாடுகளை வகுப்பதற்காக 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் வலுவாக்கம் செய்யப்பட்ட பின்னர் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் நாடளாவிய ரீதியில் காணி அளவீட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு உரித்துத் தீர்மானங்கள் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உரித்துத் தீர்மானங்கள் பதிவு மூலம் உரித்து தொடர்பான தரவுக் கட்டமைப்பு நிறுவுவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், குறித்த தரவுக் கட்டமைப்பு நில அளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ள காணித்தகவல் முறைமையுடன் ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், உரித்துப் பதிவு செய்தல் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 'பிம்சவிய' திட்டத்தில் அமுல்படுத்தும் போது பல்வேறு பிரச்சினைகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், இவ்வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை இதுவரை அடைய முடியாமல் போயுள்ளது. இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு, அனைத்துத் துறைகளின் பங்கேற்புடன் உரித்துப் பதிவு செய்தல் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு, 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் மூலம் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை தாபிக்கப்பட்டுள்ளதுடன், இந்நிறுவனத்தால் மீன்பிடி மற்றும் விவசாயம் அல்லாத சுயதொழில்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூலங்களை வழங்கும் நோக்கில் பல்வேறு ஓய்வூதியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையால் அமுல்படுத்தப்படும் ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டங்களுக்கான இலக்குக் குழுக்களை விரிவுபடுத்துவதற்காக சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் அடிப்படையில், சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு மேலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களையும் உள்ளடக்கி, அதற்கான இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 12. 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின் மூலம் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தாபித்தல், இச்சபைக்கு அதிகாரங்களை திட்டவட்டமாக வரையறுத்தல் மற்றும் அதுசார்ந்த இடைநேர்விளைவுகளுக்கான கருமங்களுக்கு ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. நாளாந்தம் அதிகரித்துவரும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் அவற்றின் பாவனையால் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களை விரிவாக்கம் செய்வதற்காக இச்சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதற்கமைய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக

அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கும், உத்தேச திருத்தங்களை உள்ளடக்கி சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலாசனை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**13. 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் மூலம் சிகிச்சைகளுக்கான அணுகலை உறுதிப்படுத்தல், புனர்வாழ்வுக்கான வசதிகளை வழங்கல் மற்றும் மீண்டும் சமூகமயப்படுத்தல் போன்ற அடிப்படை நோக்கங்களுடன் போதைப்பொருளில் தங்கியுள்ள ஆட்களுக்கு சிகிச்சையளித்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் பின்னரான பாதுகாப்பு வழங்குவதற்கு சட்ட ரீதியான பணிமுறைச் சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள போதைப்பொருட்கள் மீது தங்கியுள்ள ஆட்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான அரச கொள்கை மற்றும் முதல் தடவையாக போதைப்பொருள் பாவனையாளர்களை உள்வாங்கல் தொடர்பான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தலுக்கான தகுந்த முறையான பொறிமுறையொன்றைப் பேணிச் செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் பொருத்தமான திருத்தங்களை 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தில் அறிமுகப்படுத்த வேண்டிய தேவை அவசியமாகவுள்ளது. அதற்கமைய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கும், உத்தேச திருத்தங்களை உள்ளடக்கிய சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலாசனை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**14. நில அளவையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர் நாயகமாக கடமையாற்றிய திருமதி. பீ.கே.எல்.எஸ்.பண்டுவாவல அவர்கள் 2026.08.20 ஆம் திகதி கட்டாய ஓய்வு வயதை அடைவதால், அன்றைய தினம் தொடக்கம் ஓய்வுபெறவுள்ளார். அதற்கமைய, வெற்றிடமாகின்ற நில அளவையாளர் நாயகம் பதவிக்கு அத்திணைக்களத்தின் மேலதிக நில அளவையாளர் நாயகமாகக் கடமையாற்றும் இலங்கை நில அளவை சேவையின் விசேடதர அதிகாரியான சிரேஷ்ட அதிகாரியான, திருமதி.ஓ.டி.எம்.ஐ.திலகரத்ன அவர்களை 2026.08.20 ஆம் திகதி தொடக்கம் நியமிப்பதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**